(Signature)
Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section ~~154 Cr.P.C.~~)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040879

1. District மாவட்டம் : Tiruppur PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 7/2024/AC/TPR Date: நாள் 23.08.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act, 1988 as amended by the Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: PC (amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் July 2024 Date to : நாள் வரை 16.07.2024 21.08.2024 22.08.2024
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.08.2024 Time நேரம் : 10.45 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.08.2024 GD Vol-II Time நேரம் : 10.45 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் at about 4 K.M. South
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o. Junior Engineer, Zone-IV, Tiruppur Corporation water tank, Rayapuram, Tiruppur.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் E. Kandasamy (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Erulappan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 53/2024 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Contractor (g) Address : முகவரி Door No. 275, Periyakilnvachi, Paruthikanmai Post, Kalaiyar Kovil via, Sivagangai District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Suresh Kumar, Junior Engineer, Zone-IV, Tiruppur-Corporation, Water tank, Rayapuram, Tiruppur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/8/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
23.08.2024.

15. Date & Time of despatch to the court: 23.08.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police No. எண் .........
VBAC, Tiruppur

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2024/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 23.08.2024-ம் தேதி காலை 10.45 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.E.கந்தசாமி, த/பெ.இருளப்பன், கதவு எண்.275, பெரியகிளுவச்சி, பருத்தி கண்மாய் அஞ்சல், காளையார் கோவில் வழி, சிவகங்கை மாவட்டம் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.E.கந்தசாமி, த/பெ.இருளப்பன், கதவு எண்.275, பெரியகிளுவச்சி, பருத்தி கண்மாய் அஞ்சல், காளையார் கோவில் தாலூகா, சிவகங்கை மாவட்டம், பின்கோடு 630551, செல் நம்பர் 9842781451 பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருப்பூர் நான் சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில், பருத்திகண்மாய் அஞ்சல், பெரியகிளுவச்சியில் வசித்து வருகிறேன். நான் மாநில அளவில் முதல் வகுப்பு ஒப்பந்ததாரராக இருக்கிறேன். திருப்பூர் மாநகராட்சியில் Tamilnadu Urban Roads Infrastructure Project (Final) 2024-2025 என்ற திட்டத்தின் கீழ் Turip 2024-25 Package No.16 மாநகராட்சி பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டது. அந்த டெண்டரில் நான் கலந்து கொண்டேன். திருப்பூர் மாநகராட்சி பங்களா வீதி எக்ஸ்டன்சன், லிங்கேகவுண்டர் வீதி மேற்கு, வெங்கடேஸ்வரா நகர் ஆவரங்காடு, ஜெய்வாபாய் பள்ளி வடக்கு பகுதி குறுக்கு வீதி, பெத்திசெட்டிபுரம் கிழக்கு முதல் வீதி, பெத்திசெட்டிபுரம் கிழக்கு 2வது வீதி, பெத்திசெட்டிபுரம் 3வது வீதி, பெத்திசெட்டிபுரம் 2வது வீதி வார்டு எண்.29, 36, KRE லே அவுட் 2வது வீதி, பாத்திமா நகர் 2 வது வீதி, திரு.வி.க நகர் எக்ஸ்டன்சன் மேற்கு பகுதி முதல் வீதி, திரு.வி.க நகர் எக்ஸ்டன்சன் மேற்கு பகுதி 2வது வீதி, திரு.வி.க. நகர் எக்ஸ்டன்சன் பார்க் கிழக்கு 2வது குறுக்கு வீதி, வார்டு எண். 28, 29 L.I.G முனிசிபல் காலனி ஆகிய

பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணியை ரூ.1,59,46,253/- மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீட்டு எண்.1300/2023-24/CE.DMA நாள் 05.03.2024- படி திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் பணி உத்தரவு எனக்கு வழங்கினார். இதனை தொடர்ந்து 05.03.2024 தேதி அக்ரிமெண்ட் போடப்பட்டது. மேற்படி பணியை 6 மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்று பணி உத்தரவில் உள்ளது. நான் மேற்படி தார்சாலை பணியை குறிப்பட்டுள்ள அளவிலும், தரத்திலும், பணி முடிக்க வேண்டிய காலத்திலும் பணிகளை முடித்து கொடுத்தேன். மேற்படி பணி முடித்த பின்னர் பெருந்துறையில் உள்ள கொங்கு பொறியியல் கல்லூரியிலிருந்து பொறியாளர் குழுவினர் தார்சாலையை ஆய்வு செய்து மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அறிக்கை கொடுத்தனர். மேற்படி பகுதிகளில் நடைபெற்ற பணிகளை திருப்பூர் மாநகராட்சி மண்டலம் -4 யை கவனிக்கும் இளநிலை பொறியாளர் திரு.சுரேஷ்குமார் என்பவர் தான் பணிகளை பார்வையிட்டு அளவீடுகளை எம்.புத்தகங்களில் பதிவு செய்து கையொப்பமிட்டு பில் தயார் செய்து மேலதிகாரிகளுக்கு அனுப்பினால் தான் வேலை செய்ததற்கான பில் தொகை விடுவிக்கப்படும். மேற்படி தார்சாலை வேலைக்கான அளவீடுகளை எம்.புத்தகங்களில் எழுதி பில் தயார் செய்து கொடுக்குமாறு JE திரு.சுரேஷ்குமார் அவர்களை ஜூலை மாதத்தில் எனது செல்போனில் இருந்து அவரது செல்போன் எண்.9994195235-ல் தொடர்பு கொண்டு கேட்ட போது நீங்கள் ரூ.1,59,46,253/- மதிப்பில் டெண்டர் வேலைகளை எடுத்துள்ளீர்கள். நீங்கள் இந்த வேலைக்கு எனக்கு தனியாக 2 சதவிகிதம் கமிசன் தர வேண்டும். நீங்கள் என்னை கவனித்தால் தான் எம்.புத்தகங்களை எழுதி பில் தயார் செய்து தர முடியும். என்னை கவனிக்காமலேயே எம்.புத்தகங்களை எழுத சொன்னால் எப்படி எழுத முடியும் என்று கறாராக கூறினார். அதன்பின்னர் நான் தொடர்ந்து அவரிடம் செல்போனில் பேசிய போது என்னை கவனித்தால் தான் முடியும் என்று சொன்னார். நான் வெளியூரில் டெண்டர் வேலைகளை கவனித்து கொண்டிருந்ததால் எனது மகன் தமிழரசனிடம் JE அலுவலகத்திற்கு சென்று மேற்படி வேலையை பார்க்குமாறு சொன்னதன் பேரில் எனது மகன் 16.07.2024 தேதி மாலை சுமார் 4 மணியளவில் திருப்பூர் மாநகராட்சி, ராயபுரத்தில் மேல்நிலை நீர்தேக்கதொட்டிக்கு அடியில் JE திரு.சுரேஷ்குமார் அவர்களது அலுவலகத்திற்கு சென்று நேரில் சந்தித்து மேற்படி சாலை பணிகளுக்கான எம்.புத்தகங்களை எழுதுமாறு கேட்ட போது என்னை கவனிக்காமல் சும்மா சொன்னால் எப்படி எழுதுவது இந்த வேலைக்கு 2 சதவிகித கமிஷன்

கொடுத்தால் வேலை சீக்கிரமாக முடிந்து விடும் இல்லாவிட்டால் கிடப்பில் போட்டுவிடுவேன் என்று கறாராக சொல்லியுள்ளார். அதற்கு எனது மகன் 2 சதவிகிதம் தொகை கூடுதலாக உள்ளது கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டுள்ளார். அவரும் தொகையை குறைத்து ரூ.2,00,000/- கொடுங்கள் என்று கேட்டு, அட்வான்ஸாக முதலில் ரூ.1,00,000/- கொடுத்தால் தான் எம்.புத்தகங்களை எழுதுவேன் என்று சொல்லியுள்ளார். எனவே வேறு வழியில்லாமல் எனது மகன் அவன் கையில் வைத்திருந்த பணம் ரூ.1,00,000/-த்தை அன்றையதினமே JE திரு.சுரேஷ்குமார் அவர்களிடம் கொடுத்துள்ளார். மேலும் எம்.புத்தகங்கள் எழுதும் போது எனது மகன் உடனிருங்க வேண்டும் என்று சொல்லியுள்ளார். இந்த தகவலை எனது மகன் என்னிடம் கூறினார். 21.08.2024 தேதி மாலை சுமார் 6.30 மணியளவில் நான் எனது செல்போனிலிருந்து எனது மகன் செல்போன் எண் 8524851259 க்கு தொடர்பு கொண்டு பேசிய போது எனது மகன் JE அலுவலகத்தில் இருப்பதாக தெரிவித்து JE அவர்கள் உங்களிடம் பேச உள்ளதாக தெரிவித்து JE அவர்களிடம் போனை கொடுத்தார். அவரிடம் நான் எம்.புத்தகங்களை எழுதி விட்டீர்களா என்று கேட்ட போது எழுதி கொண்டிருப்பதாகவும் இரண்டு நாட்களில் எழுதி முடித்துவிடுவதாகவும், அதுவரை உங்கள் மகன் எங்களுக்கு உதவியாக இருக்குமாறும் கூறியுள்ளார். அப்போது அவர் உங்களது மகனிடமிருந்து பணம் ரூ.1,00,000/- பெற்றுக் கொண்டதாகவும், மீதி தொகையை எம்.புத்தகம் எழுதி முடித்தவுடன் கொடுக்குமாறு சொன்னார். நானும் சரி என்று சொன்னேன். அதன்பின்னர் எனது மகன் நேற்று 22.08.2024 தேதி மாலை சுமார் 7 மணியளவில் அவரது அலுவலகத்தில் இருந்த போது JE அவர்கள் எனது மகனை தொடர்பு கொண்டு எங்கிருக்கிறீர்கள் என்று கேட்டுள்ளார். எனது மகன் அவரது அலுவலகத்தில் இருப்பதாக சொன்ன போது எம்.புத்தகங்கள் எழுதிவிட்டேன் பார்த்தீர்களா என்று கேட்டுள்ளார். அதற்கு எனது மகன் பார்த்துவிட்டேன் கையெழுத்து போட்டுவிட்டீர்களா என்று கேட்டபோது நாளை கையொப்பம் செய்து விடுவேன். நாளையே AEE அவர்களை பார்த்துவிடலாம் என்று சொல்லி மீதி தொகையை நாளைக்கு கொடுத்துவிடுங்கள் என்று சொல்லியுள்ளார். அதற்கு எனது மகன் எனது அப்பா (நான்) நாளை நேரில் வந்து கவனிப்பார் என்று சொல்லியுள்ளார். இந்த தகவலை எனது மகன் என்னிடம் தெரிவித்தார். எனக்கு மேலும் பணம் ரூ.1,00,000/- லஞ்சமாக திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் -4

இளநிலை பொறியாளர் திரு.சுரேஷ்குமார் அவர்களுக்கு கொடுக்க விருப்பமில்லை. எனவே, திருப்பூர் மாநகராட்சியில் நான் செய்த தார்சாலை பணிக்கான அளவீடுகளை எம்.புத்தகங்களில் பதிவு செய்து கையொப்பம் செய்வதற்காகவும், பில் தயார் செய்வதற்காகவும் லஞ்சம் கேட்கும் JE திரு.சுரேஷ்குமார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx E.Kanthasamy, 23-08-2024. Sir, Received the complaint on 23.08.2024 at 10.45 hrs and made preliminary verification between 10.45 hrs to 11.15 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.7/2024/AC/TPR u/s 7(a) of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 23.08.2024 between 11.15 hrs to 12.15 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 23/08/2024 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of E.Kanthasamy, S/o.Erulappan, Door.No.275, Periyakiluvachi, Paruthikanmai Post, Kalayar Kovil Street, Sivagangai District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 23.08.2024